# வருவாரா மாதொருபாகன்?



கரவைக்கவி

மகுடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது

ஒரு

மகுடம்

வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருவாரா மாதொருபாகன்?

(கவிதைத் தொகுப்பு)

கரவைக்கவி

மகுடம்

இல.90, பார்வீதி,

மட்டக்களப்பு 30000

இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகுடம் பதிப்பக வெளியீடு - 27**

ISBN : 978 - 955 - 4041 - 23 - 3

• நூல் - வருவாரா மாதொருபாகன் (கவிதைத்தொகுப்பு) • ஆசிரியர் - மு. தயாளன்
• உரிமை - மு. தயாளன் • முதல் பதிப்பு ஒக்டோபர் - 2020 • பக்கம்-96 • வெளியீடு - மகுடம், இல. 90, பார்வீதி, மட்டக்களப்பு 30000, இலங்கை. • தொ.பே. இல. 0774338878
• வடிவமைப்பு - மு. தயாளன் • அச்சு - வணசிங்க அச்சகம், மட்டக்களப்பு.
• விலை - 300/=

• Book - Varuvara Maathorupaagan • Author - M. Thayalan • © Author • First Edition October- 2020 • Size - 1/8 • Pages-96 • Published by - Magudam Publication. 90, Bar Road, Batticaloa. • Ph.No. 0774338878 • email - magudammichael@gmail.com
• Printing - Wanasinghe Printers, Batticaloa • Price - 300/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

மகுடம் வெளியீட்டகத்தின் 27வது வெளியீடாக பிரபல கவிஞர் கரவை மு.தயாளனின் வருவாரா மாதொருபாகன்? என்ற இக்கவிதை நூலை வெளியிடுவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

மகுடம் வெளியிடும் தயாளனின் ஆறாவது வெளியீடும் அவரது மூன்றாவது கவிதை நூலும் இதுவாகும்.

அண்மைக்காலமாக முகநூலை தமது படைப்பாக்கத்திற்கும், விளம்பரப்படுத்தலுக்கும் மிகச்செம்மையாக பயன்படுத்துவதில் கரவை மு.தயாளன் பெருவெற்றி கண்டு வருகின்றார். தினம் ஒரு கவிதை என்ற ரீதியில் தனது முகநூல் பக்கத்தினை கவிதைகளால் நிரப்பி வந்த அவர் இன்று அவற்றை தொகுத்து ஒரு நூலாகத் தருகின்றார்.

தயாளனின் திறமை அவர் கவிதையின் சூட்சுமம் அறிந்தவர். புதுக்கவிதைகள், மரபுக் கவிதைகள் எதுவானாலும் அவருக்கு தேவை வெறும் வெற்று வர்ணனைகளோ அழகியல் உவமைகளோ இல்லை. அவர் தான் சொல்ல வந்த கருத்தை ஆணித்தரமாக சொல்லமுயல்வதில் பின்நிற்காதவர்.

மக்களிடம் எடுத்ததை மக்களுக்கே திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற முனைப்புக் கொண்டவர். இந்த தன்மையை அவரது படைப்புக்களில் காணலாம். அண்மைக்காலமாக மரபுக் கவிதைகளில் பல விடயங்களை மிக லாவகமாக எடுத்துச் சொல்வதில் வெற்றிகண்டு வருபவர் தயாளன். தமிழ்கவிதைகளில் சிலவேளைகளில் பரீட்சார்த்தமான முயற்சிகளில் இவர் ஈடுபடுவதும் உண்டு. அந்த வகையில் வெளிவந்ததே இவரது முதல் கவிதை நூலான தயாளனின் குறும்பாக்கள் கவிதை நூல். தொடர்ந்து தமிழ்க்கவிதைகளை புதிய உத்தியில் படைக்க முயலும் இவரது பெருமுயற்சி வெற்றி பெற வாழ்த்துகின்றேன்.

**மகுடம் வி. மைக்கல் கொலின்**

(ஆசிரியர் – மகுடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே.......


| | | |
|---|---|---|
| 1. | பதிப்புரை | 3 |
| 2. | என் மனதிலிருந்து...... | 6 |
| 3. | வாழ்க்கை எழுதுவதற்குமானதே | 7 |
| 4. | வருவாரா மாதொருபாகன்? | 11 |
| 5. | நிதர்சனம் | 13 |
| 6. | வாழ்வதனால் என்ன பயன் | 17 |
| 7. | துவண்ட மனிதன் வாழ்வு | 19 |
| 8. | பொங்காத என் வீடு | 20 |
| 9. | 2020 இல்... | 22 |
| 10. | முடிவுவரை சுமப்பேனா? | 23 |
| 11. | நந்தவனம் சிதைந்ததேனோ? | 25 |
| 12. | கூவியுனை அழைத்தாலும்.. | 26 |
| 13. | பிறந்தான் பாரதி வாரீர் மக்காள? | 27 |
| 14. | தேடுகிறேன் | 28 |
| 15. | என்னை நினைத்தாயா அஞ்சுகமே | 30 |
| 16. | பெண்ணெனும் படைப்பு | 31 |
| 17. | ஏனிந்தத் துன்பம் ஐயா? | 33 |
| 18. | வேதனை | 35 |
| 19. | துயரங் கொள்ளும் மனம் | 37 |
| 20. | அரசியல் பிழைத்தார்க்கு | 38 |
| 21. | எதுவுமில்லையே? | 39 |
| 22. | செய்வோம் | 41 |
| 23. | பாடி மகிழ்வோம் | 42 |
| 24. | அழகு | 44 |
| 25. | இன்பமே எந்நாளும் | 46 |
| 26. | புதுவுலகம் தேடு | 47 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 27. | யாதும் ஊரே யாவரும் சமனே | 49 |
| 28. | அப்பா | 52 |
| 29. | வேண்டும் | 53 |
| 30. | வேண்டாம் | 55 |
| 31. | ஏன் வந்தோம்? | 58 |
| 32. | வெளிச்சம் | 61 |
| 33. | ஈசனே உனக்கேன் கோயில் | 63 |
| 34. | ஏனய்யா? | 65 |
| 35. | மனிதன் தோற்றுப் போனான் | 66 |
| 36. | எழுத்தனின் வேண்டுகோள் | 67 |
| 37. | நடந்தவை | 68 |
| 38. | நாங்கள் நலிந்து போனோம் | 70 |
| 39. | வேடிக்கை மனிதர் | 72 |
| 40. | மரணித்து விடு | 74 |
| 41. | மன்னர்கள் நீங்களே மடையர்களல்ல | 75 |
| 42. | யதார்த்தம் சிரிக்கிறது | 77 |
| 43. | என்ன கண்டீர் மானிடரே? | 78 |
| 44. | எங்களின் கடவுள்கள் | 80 |
| 45. | நிமிர்ந்து நிற்போம் | 81 |
| 46. | கொரோனா | 82 |
| 47. | முடக்கம் | 84 |
| 48. | உலக மாறுதல் நடக்கிறது | 86 |
| 49. | உனது முடிவு உன்னிடமே | 88 |
| 50. | வக்கற்ற கொடியவர்கள் | 89 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மனதிலிருந்து......

இந்தக் கவிதைகள் யாவும் 2019 - 2020 காலப் பகுதியில் எழுதப்பட்டனவே.

யாவும் முகநூலில் வந்தவையே. என் மனதில் பட்டவைகளை - கொதிப்புகளை அவ்வப்போ எழுதியிருக்கிறேன். சொற்களின் பின்னாலும் வடிவங்களின் பின்னாலும் நான் அலைபவனல்ல. அந்தக் கணத்தில் வரும் சொற்களும் வடிவங்களும் கவிதைகளாகின்றன.

மரபுக் கவிதை - புதுக் கவிதை என்ற இன்னோரன்ன வடிவங்கள் என் உணர்ச்சிப் பிரவாகங்களைக் கட்டுப்படுத்துவதில்லை.

என் ஒரே நோக்கம் நான் எழுதுபவைகள் யாருக்காக எழுதுகின்றேனோ அவர்களுக்கு விளங்க வேண்டும் . அவர்கள் அதன் கருத்தை உள் வாங்கவேண்டும்.

படிமங்கள் இருக்கவேண்டும் - கவிதை உடனே விளங்கக் கூடாது - கவிதையின் தலைப்பினை வாசகர்கள் ஊகிக்கவேண்டும் என்கின்ற வாதங்களோடும் நவீன சிந்தனைகளோடும் ஒத்துப் போகின்றவனல்ல. விருப்பமுமில்லை. நான் மக்களுக்காக மக்களின் பிரச்சினைகளை என் பாணியில் எழுதுகிறேன். அவ்வளவு தான்.

இந்தத் தொகுப்பினை ஒப்பு நோக்கித் தந்த திருமதி ஆர்த்தி துவாரகனுக்கும் இதனை வெளியிடும் மகுடம் பதிப்பகத்தின் உரிமையாளர் மைக்கேல் கொலின் அவர்களுக்கும் அழகுற அச்சிட்ட வணசிங்க அச்சகத்தினருக்கும் இத் தொகுப்புபற்றித் தன் அபிப்பிராயங்களைத் தந்த நண்பர் அலெக்ஸ் பரந்தாமன் அவர்களுக்கும் அட்டையினை அழகுற வடிவமைத்த என் மகன் ரமணனுக்கும் என் அன்பு நிறைந்த நன்றி.

*மு. தயாளன்* (கரவைக்கவி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை எழுதுவதற்குமானதே!

படைப்பியல் என்பது எல்லோராலும் ஆக்கப் பெறுவதன்று. சிறுமை கண்டு சினம் கொள்வோரும், சமூகத்தின்பால் அக்கறை வயப்படுவோரும் தமது எண்ணங்களை எழுத்தாக வடிக்கும்போது, அது படைப்பியலாகிறது. அப்படைப்பானது ஏதோ ஒரு வடிவம் பெற்று, வெளிவந்து விடுகிறது.

கவிதை குறித்துப் பலரிடமும் பலவித கருத்துகள், விமர்சனங்கள், பார்வைகள், எதிர்பார்ப்புகள் என்பன உண்டு. கவிதை எழுதுபவர்களிடம் ஒரு கொள்கையும் இருப்பதுண்டு. அவரவர் தம் கொள்கை சார்ந்து எழுதும்போது, ஒருவருடைய படைப்பு இன்னொருவருக்கு முரணாக அல்லது பிடிப்பற்றதாகத் தோற்றமளிக்கலாம். அதற்காக எந்தவொரு படைப்பையும் நிராகரிக்காமல், படைப்பை எழுதியவரின் மனநிலையிலிருந்தே அதை நோக்க வேண்டும். கவிதை எழுதுவதற்கென ஒரு 'வரம்பு', கட்டி, அதற்குள் நின்று சொற்கள் எடுப்பது கவிதையாகாது. அப்படி நின்று எடுப்பவர்களும் கவிஞர்கள் ஆவதில்லை. கவிஞனின் உணர்வு மடையுடைத்த நீர்போல வெளிவர வேண்டும். கட்டறுத்துப் பாய வேண்டும். படிக்கும் வாசகனின் மனதுள் ஊடுருவ வேண்டும். அப்போதுதான் அப்படைப்பு நிலைத்து நின்று பேசப்படுவனவாக அமையும். ஏதோ எழுத வேண்டும்... என்ற எண்ணப்பாங்குடன் எழுந்தமானமாக எழுதிச் செல்பவர்களுக்கு மத்தியில், தம் பார்வையை உறுத்தும் விடயங்களை உள்வாங்கி... மனதில் எழும் எண்ணங்களை விரிவாக்கி... அவற்றை எழுத்துக் கோர்வைகளாக, அவை எங்கிருந்து பெறப்பட்டதோ அந்த இடத்திற்கே திரும்பவும் ஒரு படைப்பாக கொண்டுபோய்ச் சேர்ப்பவர்கள் ஒருசிலரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஒருசிலருள் ஒருவர்தான் கவிஞர் கரவை மு. தயாளன்(கரவைக்கவி) அவர்கள். கவிஞர் கரவை மு. தயாளன் அவர்கள் இலக்கிய வாசகர்களால் நன்கு அறியப்பட்டவர். எழுத்தாளுமையுள்ள ஒரு மனிதர். குறும்பாக்கள் (கவிதைத் தொகுப்பு), சில மனிதர்களும் சில நியாயங்களும்( நாவல்) புளியமரம் (சிறுகதைத் தொகுப்பு) ஒரு லண்டன் பொடியன் ( சிறுகதைத் தொகுப்பு) மடிவேன் என்று நினைத்தாயா? ( கவிதைத் தொகுப்பு) கடல் கடந்து போனவர்கள் (நாவல்) மண்ணில் தெரியுது வானம் (கட்டுரைத் தொகுப்பு) போன்ற இலக்கியப் படைப்புகளைத் தந்தவர். தற்போது "வருவாரா மாதொருபாகன் ...?" எனும் கவிதைத் தொகுப்போடு வந்து நிற்கிறார். தான் எடுத்துக்கொண்ட விடயங்களுக்கு வலுவான பார்வை கொண்டு, சொற்களை அழகியலாக, அர்த்தம் பொதிந்தனவாககக் கோர்த்து விட்டிருக்கிறார்.

"இன்னவைதான் கவியெழுத என்றுபிறர் சொன்னவற்றை நீர் திருப்பிச் சொல்லாதீர்..." எனும் மஹாகவியின் கவிக் கூற்றுக் கொப்ப, இத்தொகுப்பினுள் உள்ள ஒவ்வொரு கவிதைகளும் தனியே ஒருவிடயம் சாராமல், பலவற்றைக் கூறிச் செல்கின்றன. அவை தனித்தனியே புதுக்கவிதைகளாகவும் மரபுக்கவிதைகளாகவும் தொகுப்பினுள் குவியல் கொண்டு நிற்கின்றன.

"பிரசாரவாடைகள் ஒருபோதும் கவிதையாகா..." எனும் ஒருசாரரின் வாதத்துக்கு நடுவில், ஒரு கவிஞன், தான் பார்த்தவற்றை அனுபவித்தவற்றை சொல்வடிவமாக்கும்போது, அவை பிரச்சாரவாடையாகத் தோற்றம் கொண்டாலும், அவற்றை வாசிக்கும் விளிம்புநிலை வாசகனுக்கும், பாமரமனிதனுக்கும் என்றும் விளங்குபவையாக இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுமை கண்டு கொதிநிலையடையும் கவிஞனொருவன், தான் எழுதும் எழுத்தின் மூலம் தன் "கொதிப்பை" இறக்கி வைக்கிறான். இக்கொதிப்புக்குள் பிரச்சாரவாடை வெளிப்பட்டாலும், அது குற்றமாகாது!

"உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு பாமரனுக்குச் சார்பாக எழுதப்படும் எழுத்துக்களில்,பிரசாரவாடை இருந்தாலும், அது நியாயமான எழுத்தாகவே ஏற்றுக் கொள்ளப்படும்" என்று ஈழத்து எழுத்தாசிரியை சகோதரி தாமரைச்செல்வி அவர்கள் கூறியிருப்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். கவிஞர் கரவை மு. தயாளன் அவர்களின் கவிதைகள் யதார்த்தத்தைப்பேசி... நகருகின்றன. போர் மௌனித்தகாலம்... கொரோனாக்காலம்... என அவரைப் பாதித்த "காயங்கள்" பலவும் கவி வடிவங்களாகத் தொகுப்புக்குள் உயிர்ப்புக்கொண்டு நிற்கின்றன. போர் நிகழ்ந்த தேசத்திலிருந்து புலம்பெயர்ந்து போனவர்களின் இன்றைய புலம்பல்களாக ஒலிக்கிறது "ஏன் வந்தோம்...?" எனும் கவிதை. இது கவிஞரின் அனுபவமாகவும் கொள்ளலாம். போரை முன்னிறுத்தி, மக்களிடமிருந்து பெற்றுக்கொண்ட "அன்பளிப்பு" களுக்கு என்ன நடந்தது? என்பது எவருக்குமே தெரியாத நிலையில்,

***தொடங்கும் போதும்***
***எங்களைக் கேட்கவில்லை***
***மௌனிக்கும்போதும்***
***எங்களைக் கேட்கவில்லை.***

***நாங்கள் இப்போ என்ன செய்வது..?*** என்று கவிஞர் கேட்பது மட்டுமல்லாது, ஒவ்வொருவரும் கேட்கவேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வியாகவும் படுகிறது. இது தவிர -'நாங்கள் நலிந்துபோனோம்...' எனும் கவிதையில் வரும்,

***வீடுகளில் வந்து***
***எங்கள் பிள்ளைகளை***
***அழைத்துச் சென்றவர்களை***
***இப்போ காணவில்லை.***
***பிள்ளைகளையும் காணவில்லை...***

என்ற இந்த வரிகள், பூஜ்ஜியமாகிப்போன ஆயுதப் போராட்டத்தின் இன்றைய எச்ச நிலையை எடுத்தியம்புகிறது. கவிஞர் ஓர் ஆசிரியராக இருப்பதாலோ என்னவோ இச் சமூகத்திற்குத் தனது கவிதைகள் மூலம் பல அறிவார்ந்த உரைகளைச் சொல்லிச் செல்கிறார். "நான் எழுதிக் கொண்டேயிருப்பேன் என் வாழ்வு இருக்கும்வரை" என்று "துயரங்கொள்ளும் மனம்" எனும் கவிதையில் தன்நிலைபற்றிக் கூறவருவதனூடாக, இவர் எழுத்து இலக்கியத்தின்மீது கொண்டுள்ள விடாப்பற்றுதலை விளங்கிக்கொள்ள முடிகிறது.

"கவிதை எழுதுவதற்காக கவிதை எழுதக்கூடாது. வாழ்க்கையை எழுதுவதற்காகக் கவிதை எழுத வேண்டும்..." என்று மு.மேத்தா அவர்கள் கூறியிருப்பதுபோன்று,கவிஞர் கரவை மு. தயாளன் அவர்கள், ஒவ்வொருவரினதும் வாழ்க்கையைக் கவிதைகளாக எழுதிவருகின்றார். அவர் எழுதிக் கொண்டேயிருக்க வேண்டும் அவர் வாழ்வு இருக்கும்வரை. ஆம்! தொடர்ந்து எழுதுங்கள்...வாழ்க்கை வாழ்வதற்கானது மட்டுமல்ல... எழுதுவதற்குமானதே!

**- அலெக்ஸ்பரந்தாமன்,**
**புதுக்குடியிருப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருவாரா மாதொருபாகன்?

எங்கு பார்க்கினும் மரணம்
எவரைப் பார்க்கினும் நடுக்கம்
தூங்கப் போயினும் துயரம்
நாலு சுவருக்குள் வாழ்க்கை
யாரைக் கேட்பது? ஏனென்று
கேட்டால் பதிலோ கிடைக்காது
ஊரை யடித்துப் பூட்டுகிறார்
உசாராய் இருக்கச் சொன்னால்

எப்படி இருப்பது புரியவில்லை
எதையும் ஏற்க முடியவில்லை
செப்படி வித்தை போலுள்ள
செகத்தினைக் காப்பது எப்படி?
படைத்தவன் கோபம் இதுவென்று
பக்தி நிறைந்தவர் கூறுகிறார்
படைத்தவன் பூமிக்கு வந்தால்தான்
பதகழிப்பு நீங்கும் என்கிறார்

வருவாரா அட மாதொருபாகன்
உயிரைக் காக்க வருவாரா?
வருவார் என்று நம்பியிருந்து
வாராது விட்டால் ஏதுநிலைமை.
எதுவும் நடந்தால்தானே நம்பலாம்
நடக்கும் நடக்கும் என்கிறார்
இதுவொரு விதியென நாளும்
எண்ணி வாழ்தல் சரிதானா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்தும் உலகில் இல்லையாம்
மடிந்தபின்பே அது வருமாம்
திருத்தணி முருகன் வருவானா?
தீர்த்தம் தந்து மீட்பானா?
சரித்திரம் நகர்ந்து செல்கிறது
உலகம் மாறி நகர்கிறது
புரிந்திடாத் தத்துவம் பலதும்
கறையான் உணவாய் ஆகுமோ?

கருந்தேள் கொட்டிய நிலையாக
உலகம் சுருண்டு அழுகிறது
பருந்துகள் வானில் பறந்தபடி
பூமிக்கு வருவது காணீரோ?
நம்பிக்கை யூட்டும் கவிபண்ண
நான்கு சுவருள் முடியவில்லை.
செப்பிய யாவும் தவறெனின்
புத்தி யுள்ளோரே மன்னிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதர்சனம்

ஆணும் பெண்ணும்
அன்பால் இணைந்து
உடல்கள் உரசி
விந்துகள் சேர்ந்து

வயிற்றின் அறையுள்
உயிரது தோன்றி
உணவைப் பகிர்ந்து
உடலுள் வளர்ந்து

குடல்கள் இடையில்
அசைந்து புரண்டு
ஒன்பது மாதம்
ஓடிச் செல்ல

இடுப்பு வலியின்
நோவைத் தாங்கி
அம்மா என்று
அழுது குழறி

வலியில் நெளிந்து
முக்கி முனகி
அழுத படியே
உயிரதைத் தந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலியை மறந்து
உவகை அடைந்து
உடலை அணைத்துக்
களைப்பை மறந்து

மனமது மகிழ்ந்து
மகிழ்ச்சி நிறைந்து
உயிரதைத் தாங்கும்
உடலது உலகில்

நாளொரு வண்ணம்
பொழுதொரு வேளை
நன்றாய் வளர்ந்து
தவண்டு புரண்டு

கைகால் நீட்டி
முகட்டைப் பார்த்துப்
புன்னகை புரிந்து
காலம் விரைந்திட

எழுந்து நடந்து
எ:கிப் பாய்ந்து
புழுதி யளைந்து
வீதியில் ஓடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நதியில் குளித்து
நாலும் படித்துப்
பதியை வணங்கிப்
பதிகம் பாடி

விதியின் வழியே
நகர்ந்து சென்று
வீரம் நிறைந்த
இளைஞன் ஆகிக்

காதல் செய்து
கன்னியை மணந்து
காதல் வாழ்வில்
இன்பம் சுவைத்து

உண்மையும் பொய்யும்
உதட்டில் தவள
குற்றம் யாவும்
குறைவறச் செய்து

மானிட தர்மம்
மறந்து நடந்து
ஆணவம் கொண்டு
அழிவுகள் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயது முதிர்ந்து
நடையை மறந்து
தடியின் நட்புடன்
மெல்ல நடந்து

இருந்த இடத்தில்
யாவும் புரிந்து
புருவம் சுருங்கிப்
பார்வை இழந்து

காலம் வருகையில்
காலனை அணைத்து
மண்ணில் புதைந்து
மறைந்து போதல்

மனித வாழ்வின்
புனித கதையென
யாவரும் புரிந்து
நல்லன செய்து

பாவம் அகற்றிப்
பாரினில் வாழ்ந்து
புண்ணியம் புரிந்து
புனிதம் அடைவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வதனால் என்ன பயன்?

என் பிறப்பின் காரணத்தை
நான் அறியேன் பராபரமே
ஊன் உடலின் உபாதைகளை
உபாதை யுடன் சகிக்கிறேன்

என்னை நான் இயக்காமல்
இன் னொருதர் இயக்கிவிடின்
என்னவனே நான் இருந்து
ஏது பயன் கூறிடுவாய்?

பென்னம் பெரியவனே
உனை வணங்கக் கைமறுத்தால்
என்னவனே நான் இருந்து
ஏது பயன் கூறிடுவாய்?

கண்குளிர உனைப் பார்த்து
நெஞ்சமது தான் மகிழக்
கண் திறக்க மறுத்துவிடில்
வாழ்வதனால் என்ன பயன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் உடலைப் பிணமாக்கி
நீ பறந்து செல்வதெனின்
மன்னவனே இவ் வுலகில்
இருப்பதுதான் வாழ்வு தாமோ?

காலிரண்டும் முடமாகிக்
கைகளுமோ அசைவின்றித்
தோல்கண்ணை மறைத்துவிடில்
வாழ்ந்தென்ன இவ் வுலகில்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துவண்ட மனிதன் வாழ்வு

இறகு கூடப் பாரமென்று
கூட்டைத் தேடும் காகங்கள்
பிறப்புக் கூடப் பாரமென்று
இறப்பைத் தேடும் ஆன்மாக்கள்

மானிட வாழ்வின் அர்த்தம்தேடி
மாழும் மனித ஆன்மாக்கள்
ஏனினி வாழ்க்கை என்றேநாளும்
ஏணியில் சறுக்கும் கோலங்கள்

தோல்வி யெதுவேனக் கேட்டே
துவண்ட மானிடன் வாழ்வு
செல்லும் பாதை புரியாதிங்கு
செய்திடும் பாவக் கோலங்கள்

வாழ்வைக் கூடப் பாரமென்று
வாழ மறுக்கும் மனிதர்கள்
ஊழ்வினை யென்று வாழ்வை
உதறிடும் மனித முடிவுகள்

உலகினில் காட்டும் புதியனயாவும்
உண்மையில் இங்கு ஏதென
ஓலமிட்டவர் கேட்கும் கேள்விகள்
ஓங்கி ஒலித்து யாவும்மாறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்காத என் வீடு

எத்தனை பொங்கல் அம்மா
அத்தனையும் கடந்து விட்டேன்
சத்தியமாய் ஒரு நாளும்
என்வீட்டில் பொங்க வில்லை

வயல் முழுக்க விதைபோட்டேன்
வந்தவைகள் எனக் கில்லை
அயல் வீட்டில் கடன்வாங்கி
அடுத்த வேளை உண்கிறேன்

ஊரில் உள்ள பணக்காரர்
உயர் வர்க்கப் பெரியவர்கள்
பார் முழுக்கப் பலபேர்
பொங்கி மகிழ் வெய்துகிறார்

நாள் முழுக்க நாம் உழைத்தோம்
நாதியற்று நடைப் பிணமாய்
அள்ளிப் பொங்க விங்கு
அரிசி இன்றி அழுகின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழவர்க்குப் பொங்க லென்று
ஊர் முழுக்கச் சொல்லுகிறார்
உழவனின் வறுமை தனை
ஊரிலுள்ளோர் பார்ப்ப தில்லை

பொங்கிடத்தான் எமக்கும் ஆசை
பொங்குவது எதனை ஐயா?
ஏங்கியே நாளெல்லாம் மனம்
மட்டும்தான் பொங்கு தய்யா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2020 இல்...

ஓடி ஓடி உழைத்திடுவோம்
ஒப்பற்ற வாழ்வு வாழ்ந்திடுவோம்
ஆடிப் பாடி மகிழ்ந்திடுவோம்
ஆன வரைக்கும் சிரித்திடுவோம்
நடந்தவை யாவும் மறந்திடுவோம்
நடப்பவற்றை எண்ணிடுவோம்
கூடப் பிறந்த ஆணவத்தை
குப்பையில் எறிந்து மகிழ்ந்திடுவோம்

புத்தகம் பலதைப் படித்திடுவோம்
புதுப்புதுத் தத்துவம் கற்றிடுவோம்
சத்தமில்லாமல் மடமைகள் யாவும்
எரியும் நெருப்பில் எறிந்திடுவோம்
நட்புகள் பலரைச் சேர்த்திடுவோம்
நட்பை உயிராய் மதித்திடுவோம்
திட்டங்கள் பலதைத் தீட்டிடுவோம்
தீமைகள் யாவையும் எரித்திடுவோம்

குட்டக் குட்டக் குனியாமல்
நிமிர்ந்து நியாயம் கேட்டிடுவோம்
பட்டது போதும் சாமியென
எண்ணுதல் தவிர்த்து வாழ்ந்திடுவோம்
யாவரும் சிரித்து வாழ்ந்திடவே
பாவலன் நானும் வாழ்த்துகிறேன்
காவலனாக நாள் தோறும்
என்கவிதைகள் உம்மைக் காத்திடுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவுவரை சுமப்பேனா?

கற் குவியல் மீதிருந்து
கல்லினை நான் தேடுகிறேன்
சொற் குவியல் மீதிருந்து
நல்ல கவி படைப்பேனா?

என் மனதின் பாரத்தை
எங்கு நான் இறக்குவேன்?
என் கண்கள் பனிப்பதனால்
என்னதான் மாறு மிங்கு?

படைத்தவனை நம்பி நான்
பல நூறு காதங்கள்
உடைந்தபடி நடந்து விட்டேன்
ஊறுதனைக் களைவ தெப்போ?

ஆண்டு பல நூறிங்கு
அடுத் தடுத்து மாறிடினும்
மீண்டு மொரு ஆண்டின்
முடிவு வரை சுமப்பேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கானகத்தில் மான் கண்டு
வேடன் கலைப்பது போல்
ஞானத் திரு என்னை
வேடன் போல் கலைப்பதென்ன?

நீண்ட நெடுங் காலம்
நித்திரையில் ஆழ்ந்து விடக்
கண்களுக்குப் பெரு மாசை
கண்கள்தான் மறுப்ப தென்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நந்தவனம் சிதைந்ததேனோ?

வானந்தனில் நான் பறந்து
வானந்தனைத் தொட்டாலும்
மோனத் தவம் இருக்கவிட்டு
ஞானந் தர மறுப்பதேனோ?

நீ வருவாய் என்றிருந்தேன்
வழி மீது காத்திருந்தேன்
நீயும் வரவில்லை நின்
நிழலும் வர வில்லையப்பா

காகிதத்தை விரித்து வைத்துக்
கப்பல் செய்து பார்த்திருந்தேன்
காகிதம் மிதப்பதற்கு வானம்
மழை பொழிய வில்லை

பேருக் கொரு பிள்ளையென்று
ஊர் முழுக்கச் சொன்னேன்
ஊருக்குப் பூக் கொடுத்த
நந்தவனம் சிதைந்த தேனோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூவி உனை அழைத்தாலும்.....

கூவி உனை அழைத்தாலும்- உந்தன்
அருள் கிடைக்க வில்லை
இன்னும் என்ன சோதனையோ
இறைவா போதுமினி விட்டுவிடு

வேளை வரும் போதெல்லாம்- உந்தன்
புகழ் பாடுகின்றேன்: வரும்
நாளை என்னும் பொழுதினில்
நன்மை தனை நாடுகின்றேன்

வந்து எனைக் காக்கவென்று- உந்தன்
வாசல் வருகின்றேன் : துன்பம்
இந்தப் பூமி தன்னில்
என்னை மட்டும் வாட்டுவதேன்

அன்னையையும் கேட்டு விட்டேன் - என்
அப்பனையும் கேட்டு விட்டேன்
இன்னும் உங்கள் மனமிரங்கி
என்னை யேன் காக்கவில்லை

பொன்னை நான் கேட்கவில்லை - உந்தன்
அன்புதானே கேட்டு நின்றேன்
இன்னும் எனைக் கண்திறந்து
பார்க்க மன மில்லையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்தான் பாரதி வாரீர் மக்காள்!

யாரது பிறந்தது பாரதியா? அட
யாவும் தெரிந்த கவியரசா?
ஊரதில் பிறந்த யாவருக்கும் நல்
உணவது கிடைக்க வழிதேடி
ஊரதை யழிக்கும் வேகங் கொண்ட
உத்தமக் கவிஞன் பாரதியின்று
பாரதில் நன்மை செழித் தோங்கப்
பிறந்தான் பாரதி வாரீர்மக்காள்!

சந்தம் நிறைந்த கவி தோன்றும்
சத்தம் வந்த திசைகளிலே
சுந்தரத் தமிழால் சுவை படவே
சுழரும் பம்பரம் போலொரு
சந்தம் நிறைந்த கவி தந்த
சர்வ உலகும் புகழ்ந் தேத்தும்
சிந்தனை யாளன் பெரியோன் பாரதி
பிறந்தான் பார்க்க வாரீர்மக்காள்!

சின்னஞ் சிறுவர் மகிழ்ந்து சிரிக்கப்
பாப்பா பாட்டுப் பலபாடிப்
பெண்ணம் பெரிய பெயர் பெற்றிங்கு
விடுதலை தேடிக் கவியாத்துத்
தன்னுள் வீரம் கூவி எழுந்திடத்
தடதடவென்று எழுந்து அந்தோ
மின்னல் போலே தோன்றிய பாரதி
பிறந்தான் பார்க்க வாரீர்மக்காள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடுகிறேன்...

செங்கரும்புத் தோட்டத்தில்
செவ்விளனி தேடுகிறேன்
எங்கிருந்து போவதென
வழிதேடி அலைகிறேன்

வந்திருக்கும் துன்பமதைத்
தீர்க்கும்வழி தேடுகிறேன்
எந்தவழி வந்ததெனத்
தெரியாமல் விழிக்கின்றேன்

முட்டையினைக் கண்டவுடன்
கோழியினைத் தேடுகிறேன்
திட்டமிலா வாழ்விங்கு
திரும்பியதால் வியக்கின்றேன்.

பட்டமதைக் கண்டவுடன்
காற்றதனைத் தேடுகிறேன்
கிட்டவந்த வாழ்வுதனைத்
தொலைத்தபடி அழுகின்றேன்

வட்டநிலா வருமளவும்
சூரியனைச் சபிக்கின்றேன்
சுட்டபழம் தந்தவனை
வியப்புடனே பார்க்கின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டவுடன் சுருங்கிவிடும்
　　தாவரத்தைத் தேடுகிறேன்
தொட்டால்தான் வருமென்ற
　　நோயால் துடிக்கிறேன்

ஏதும் புரியாமல்
　　ஏங்கி நடுங்குகிறேன்
யாதும் அவனென்று
　　அவன்தாளைத் தேடுகிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னை நினைத்தாயா அஞ்சுகமே?

கூடித் திரிந்து பல
        மானிடரைக் கொன்று குவித்து
வாடிக் கிடப்பவரைக் காலால்
        உதைத்து மனம் வாடப் பிறர்
துன்பத்தில் இன்பம் காணும்
        பேடியாய் வாழ்வே னென்று
என்னை நினைத்தாயா அஞ்சுகமே?

மனிதம் தொலைத்துச் சில
        மானிடர் அலைவது போல்
கூனிக் குறுகிக் கோழையைப்
        போல் நாதியற்றுப் பிறர்
மேனி நசித்துப் பெரும்
        கொடியவனாய் வாழ்வே னென்று
என்னை நினைத்தாயா அஞ்சுகமே?

என்ன செய்வதென எதுவும்
        புரியாது இவ் வுலகில்
தன்னைப் பெரிதாக நினைத்துப்
        பல மானிடரின் மனதைத்
துன் புறுத்திப் பிறர்
        வாடக் கவியெழுதும் கவிஞனென
என்னை நினைத்தாயா அஞ்சுகமே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணெனும் படைப்பு

அங்கேஓர் கடவுள் வந்து
அழகான பெண்ணைத் தந்தார்
எங்கேயும் அவள்போல் உலகில்
யாருமே இல்லை என்றார்
மீன்போலக் கண்ணை வைத்து
அழகான உடலைக் கொடுத்தார்
தேன்போன்ற குரலைத் தந்து
தேசத்தின் தெய்வம் என்றார்

பாசத்தை அவளுள் வைத்துப்
பார்புகழும் மங்கை என்றார்
மாசற்ற மனதை வார்த்து
மகத்தான சக்தி கொடுத்தார்
நாசத்தில் அவளைத் தள்ள
உரிமையைப் பறித்து வைத்தார்
நிசத்தினிலே பேச்சி யாக்கி
நித்தமும் அழுதிட வைத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பினிலே உண்மை வைத்துக்
கற்பாலே அவளைக் கொன்றார்
கற்களால் எறிய வைத்து
எறிவதற்கு ஆணைத் தந்தார்
நிற்றலுக்கு நேரம் இன்றி
வேலையதைப் புரிய வைத்தார்
சற்றேனும் மதிப் பின்றி
சாக்கடையாய் ஆக்கி வைத்தார்

அங்கேயோர் கடவுள் வந்து
பெண்ணவள் துன்பம் கண்டார்
தங்கமே அழுகை விட்டு
நடந்ததைச் சொல்லு என்றார்
சிங்கமாய் பாய்ந்து நீயும்
ஈனரை வீழ்த்து என்றார்
எங்குமே உன் குரலால்
அகிலமே அதிரட்டு மென்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏனிந்தத் துன்பம் ஐயா?

ஆராரோ ஆரிவரோ
ஆரிவரோ ஆராரோ

வாருங்கள் கடவுளய்யா
கூறுங்கள் உமதுகதை
யாருக்கும் துன்பமிலா
வாழ்வுண்டா சொல்லுங்கள்

ஆராரோ ஆரிவரோ
ஆரிவரோ ஆராரோ

பாரிலுள்ள மனிதரெல்லாம்
உன்படைப்பு என்கின்றார்
வேரினிலே நோய்படைத்து
வேதனையை ஏன்தந்தீர்

ஆராரோ ஆரிவரோ
ஆரிவரோ ஆராரோ

முந்திமுந்தி உனைவந்து
முழுமையாய் தொழுதேனே
சந்தியெலாம் இருக்கின்றீர்
சந்திசிரிக்க ஏன்வைத்தீர்?

ஆராரோ ஆரிவரோ
ஆரிவரோ ஆராரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போது பார்த்தாலும்
சிரித்தபடி இருக்கின்றீர்
முப்போதும் தொழுகின்ற
எங்களுக்கு ஏன்துன்பம்?

ஆராரோ ஆரிவரோ
ஆரிவரோ ஆராரோ

சின்னவனின் பாவமெல்லாம்
சிறுவயதில் கழிக்கவென்றோ
கன்னத்தில் நீர்வழியக்
கடுந்துன்பம் நீர்கொடுத்தீர்

ஆராரோ ஆரிவரோ
ஆரிவரோ ஆராரோ

என்னைப்போல் எத்தனைபேர்
படுந்துயரில் வீழ்ந்தழுது
உனைப்பழி சொல்லியிங்கு
அறம்பாடி முடிக்கின்றார்

ஆராரோ ஆரிவரோ
ஆரிவரோ ஆராரோ

நீயிருந்தீர் என்றாலிங்கு
ஓடோடி வந்தெமது
சேயிருக்கும் நிலைமாற்றி
உம்மிருப்பைக் காட்டிடுவீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதனை

பாடிக் களைத்து விட்டேன்
பாவியர் செய்த செயலை
வாடிப் பல நாட்கள்
வேதனையில் அழு திருப்பேன்
இருக்க வோர் வீடும்
அதைக் கட்டவோர் நிலமும்
உருகிக் கேட்டோம் தாராததால்
உறுக்கிக் கேட்டோம் கொன்றார்

பங்கரில் ஓடி ஒழித்தோம்
விட்டாரா மா கொடியோர்
இழுத்து எம் நெற்றியில்
துடிக்கத் துடிக்கச் சுட்டார்.
பழுத்த இரும்பைச் செருகியதாய்க்
கூர் ஆயுதம் கொண்டெமை
உழுது கிழித்து மகிழ்ந்து
வீரம் பேசி நின்றார்

மடையர் உடல் எரிந்து
சாம்ப ராகிலும் மீண்டும்
தடைகளைத் தகர்த்து நாம்
மீண்டும் மீண்டும் வருவோம்
என்னும் எமது ஓர்மம்
என்றுமே புரியாது பாவம்
கன்னித் தமிழை வென்றதாய்
சிரித்து மகிழுகின்றார் பேடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்து நின்றவரும் சுட்டார்
ஓடி ஒழிய இடமின்றிக்
காத்தாய் அங்கும் இங்கும்
அலறித் துடித்து மடிந்தோம்
முள்ளி மண்ணின் மேனியிலே
இரத்தம் சிந்திநாம் மடிந்தோம்
பள்ளி செல்லும் பாலகரும்
பதறப் பதற இறந்தேயானார்

வருவோம் மீண்டும் வருவோம்
வஞ்சகர் மேனிபூமியில் சரித்துத்
தருவோம் பாடம் தருவோம்
வாழ்வில் மறவாதிவ் வுலகில்
மாண்ட மறவன் சிலிர்த்தெழுந்து
மாண்புறு விடுதலை பெற்றுவிட
நீண்ட பயணம் மீண்டும்
நடந்து வெல்வோம் வெல்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயரங் கொள்ளும் மனம்

நான் எழுதிக்கொண்டே இருப்பேன்
என்வாழ்வு இருக்கும் வரை
நான் அழுதுகொண்டே இருப்பேன்
என் துன்பம் தீரும்வரை
பூக்கள் மீது வண்டு வந்து
தேன்குடித்துப் பறந்து செல்லும்
தூக்க மிழந்து என் நெஞ்சம்
துயரம்விழுங்கி மடிந்து போகும்

நீண்ட நெடுங் கடலின் நடுவே
எதிர்த்திசையில் நீந்திச் செல்வேன்.
மாண்டவர்கள் பலரின் நடுவே என்
மலர்ப்படுக்கை தேடி நிற்பேன்
காகம் கத்தும் போதி லெல்லாம்
விருந்தினரைப் பார்த்து நிற்பேன்.
தேகம் விட்டுச் சென்ற பின்னே
காகமாக வந்து நிற்பேன்

என்னைத் தேடி எங்கு செல்வேன்
என்உயிர் இருக்கும் வரை
என்னுள் இருக்கும் என்னைக் கண்டு
உன்னதம் பெற்று நிற்பேன்
தப்புத் தப்பாய் ஆட்ட மெல்லாம்
எனைமறந்து செய்து நிற்பேன்
தெப்ப மது நீரின் மேலே
அசைவது போல் அசைந்து செல்வேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் பிழைத்தார்க்கு

அரசியல் பிழைத்தார்க்கு அறம் கூற்றாகும்
விரசங்கள் பெருகும் விவேகங்கள் மங்கும்
குரங்கென மானிடர் தாவித் திரிவர்
பரமனைப் பந்தாடிப் பாவங்கள் புரிவர்
கத்திகள் வாள்கள் கரங்களில் எடுப்பர்
நித்தமும் வெட்டுவர் நீதியைக் கொல்வர்
கல்வியை மறப்பர் கலவியை விரும்புவர்
பல்லினச் சேர்க்கையில் பழகியமிழ்ந்து மடிவர்
பரீட்சைகள் யாவிலும் பின்னோக்கி நகர்வர்
மாரீசனாய் மறைந்து மானம் இழப்பர்
போதையைத் தேடி மனிதத்தைத் தொலைப்பர்
சீதைகளை எல்லாம் சீரழிக்க முனைவர்
அரசியல் பிழைத்தார்க்கு அறம் கூற்றாகும்
மரத்த மனங்களில் மனிதங்கள் மலரட்டும்
புதிய பாதைகள் திறந்திட வேண்டும்
விதியை நோகாது புதியவை வரட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதுவுமில்லையே!

அங்கே ஒரு ஊர் இருந்ததே
அதன் நடுவில் குளம் இருந்ததே
குளந்தன்னில் நீர் இருந்ததே
இன்றங்கே எதுவும் இல்லையே

அன்றங்கே கோயில் இருந்ததே
அதனுள்ளே சாமி இருந்ததே
இன்றங்கே கோயில் இருக்குதே
சாமி மட்டும் அங் கில்லையே

அன்றங்கே சாதி இருந்ததே
சாதிகளால் சாவு மில்லையே
இன்றங்கே நீதி இல்லையே
சாதியினால் சாவும் நடக்குதே

பெண்ணுக்கு மதிப்பு இருந்ததே
அவளுள்ளே நெருப்பும் இருந்ததே
இன்றங்கே எதுவும் இல்லையே
பெண்ணுக்குள் தீயும் இல்லையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றங்கே மதங்கள் இருந்ததே
மதத்துக்குள் அன் பிருந்ததே
இன்றங்கே மோதல் மட்டுமே
மதத்துக்குள் அன்பு இல்லையே.

அங்கே ஒரு ஊர் இருந்ததே
அதன் நடுவில் குளம் இருந்ததே
குளம் தன்னில் நீர் இருந்ததே
இன்றங்கே எதுவும் இல்லையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்வோம்

நல்லதைச் செய்வோம்
நாமும் மனிதராவோம்
வல்லவர் நாமென்ற
வாக்கினைக் கூறிடுவோம்

முந்தைய மனிதர்
முன்னே கூறியதை
இந்த உலகில்
இயல்பாக்கி மகிழ்வோம்

நின்னைச் சரணடைந்து
நித்தம் கவிபாடி
கன்னத்தில் சிரிப்பூர
கைகூப்பித் தொழுவோம்

பொன்னையும் பொருளையும்
பொருட்டாய் கொள்ளாமல்
நல்லதைச் செய்து
நாமும் மனிதராவோம்

தவித்திடும் மனிதரை
அள்ளி அணைத்துப்
புவியினில் அவரை
நன்றே பார்த்திடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடி மகிழ்வோம்

வண்ணத் தமிழ் எடுத்து
வடிவாகப் பாடி மகிழ்வோம்
எண்ண மெல்லாம் எழில்
கொஞ்சும் பூவாய் மலர்வோம்

கண் ணசைவால் காரிகையர்
எண்ணம் கவர்ந்து மகிழ்வோம்
மண்ணில் மலர்ந்திடும் பூக்களை
உச்சியில் வைத்து மகிழ்வோம்

சித்திரங்கள் வரைந்து மனச்
சிக்கல்களைத் தூர எறிவோம்
வத்தல் குழம்பு வைத்து
வடிவாக உண்டு மகிழ்வோம்

சிந்தனைகள் சிறகடித்து வானில்
சிறுகுருவி போற் பறப்போம்
முந்தையவர் வாழ்வு தன்னை
முதலாய்க் கொண்டு நகர்வோம்

செய்த தவம் அத்தனையும்
செந்தமிழே உனக் கென்று
மெய் தாழ்த்தி மெதுவாக
மென் குரலில் பாப்பாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த பந்தம் புடைசூழச்
சொர்க்கத்தின் வாசல் சென்று
விந்தனாய் அமர்ந் திருக்கும்
சொக்கனை வாழ்த்தி நிற்போம்

மானிடரின் துன்ப மெலாம்
மாதவனே உன் அருளால்
நானிலத்தை விட் டகன்று
நாயகனே உன் அடியில்

பாதம் தழுவிடப் பரந்தாமா
பார்வையினை எம் பக்கம்
திருப்பாயோ கூறி விடய்யா
தில்லையில் வாழும் தீரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகு

கன்னஞ் சிவக்கப்
பெண்ணவள் வந்தால்
அன்ன நடையவள்
அழகைக் காட்டும்

மின்னல் வானில்
தெரியும் போதில்
சின்ன விளக்கும்
அழகாய்த் தெரியும்

மண்ணில் முளைகள்
வெளிவரும் போதில்
கண்ணில் தெரிவன
அழகாய்த் தெரியும்

சபையின் முன்னே
இருக்கும் போதில்
தாயின் முகத்தில்
அழகு தெரியும்

அப்பா கையை
அன்புடன் பற்றின்
நெஞ்சில் உவகை
அழகாய்த் தெரியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பள நாளில்
கையில் பணம்வர
நெஞ்சில் வருவது
மகிழ்ச்சியின் அழகு

சந்தம் நிறைந்த
கவிதை பாடின்
எந்தன் மனதில்
அழகு சிரிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பமே எந்நாளும்

சோர்ந்து விழுந்து தூங்காதே
சொர்ப்பனம் கண்டு ஏங்காதே
சார்ந்து தாளம் போடாதே
சத்தம் போட்டுப் பேசாதே
நிந்தனை செய்து மகிழாதே
நிபந்தனை வைத்து மகிழாதே
சிந்தனை செய்ய மறக்காதே
சிரித்திட வாழ்வை வாழாதே
பெண்ணைப் பிரித்து வையாதே
பெண்ணை மதிக்க மறக்காதே
எண்ணிய தெல்லாம் செய்யாதே
செய்வதை எல்லாம் எண்ணாதே
மரணம் தேடி ஓடாதே
வரும் போததனை மறுக்காதே
சிரமம் வருகையில் சினக்காதே
சினந்து என்றும் கொதிக்காதே
தமிழைக் கடுமை ஆக்காதே
தமிழைப் படிக்க மறக்காதே
துமிதுமி யென்று துள்ளாதே
துள்ளி வாழ்வைக் குழப்பாதே
மானிடம் பேண மறக்காதே
மெய்யைப் பேசத் தயங்காதே
நானிலம் போற்றின் மயங்காதே
நால்வர் தூற்ற வாழாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவுலகம் தேடு

துன்பத்தைத் தூக்கிக்
கிடப்பிலே போடு
இன்பத்தை வாவென்று
அழைத்து வாழ்

உலகம் எப்பொழுதும்
இனிய பிரதேசம்
அலகிலான் அமைத்த
அற்புத மண்டபம்

நிமிர்ந்து நின்றால்
நிம்மதி பிறக்கும்
அமிழ்தினும் இனிய
இன்பம் சுரக்கும்

போனதை நினைத்துக்
கவலை கொள்ளாதே
ஏனது என்று
ஆய்வுகள் வேண்டாம்

நேற்றைய பொழுது
நேற்றோடு போகட்டும்
இன்றைய பொழுதை
இனிதாக வாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் வாழ்வில்
வசந்தத்தைக் காண்
கூழைக் குடித்தாலும்
கூத்தாடிக் குடி

வருவது எதையும்
நேராய் எதிர்கொள்
தருவது எதையும்
மகிழ்வோ டேற்றிடு

காரியம் யாவிலும்
வெற்றியைக் காண்
பூரித்த மனதுடன்
புதுவுலகம் தேடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாதும் ஊரே யாவரும் சமனே

போது மென்றே
        கூறிடப் பழகுவீர்
மாதுவைக் கண்டால்
        மதித்து நடப்பீர்

வாதுகள் புரிந்து
        நேரத்தைக் கொல்லாதீர்
ஏதும் புரியாமல்
        எதுவும் செய்யாதீர்

புரியாமல் கவிதைகள்
        எழுதிக் குழப்பாதீர்
புரிந்த விடயத்தை
        மக்களுக் களிப்பீர்

எழுதுபவை யாவையும்
        மக்களுக் கெழுதுங்கள்
உழுது வாழ்பவனை
        உயர்த்தி எழுதுங்கள்

தேரும் போரும்
        ஊருக்கு வேண்டாம்
பேரை நோக்கிப்
        பெம்மானைக் கொல்லாதீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூக்களின் வனத்தில்
பூக்களைக் கொல்லாதீர்
உக்கிடும் குப்பைகளை
வீதியில் பரவாதீர்

எண்ணமும் எழுத்தும்
ஒன்றெனக் கொள்வீர்
புண்ணில் வேலைப்
பாய்ச்சி மகிழாதீர்

மெதுவாய் மெதுவாய்ச்
சாதியைக் கொல்வீர்
யாதும் ஊரே
யாவரும் சமனே

பழமையை என்றும்
போற்றி வாழ்வீர்
அழகிய தமிழை
அன்பாய்க் காப்பீர்

முட்டாளைக் காணின்
ஒதுங்கிச் செல்வீர்
முட்டாளைத் திருத்த
நேரத்தைக் கொல்லாதீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்ட நிலவை
        வர்ணிக்க வேண்டாம்
சுட்ட பழத்தைத்
        தூர எறியுங்கள்

விதியென்று சொல்லி
        மதியை இழக்காதீர்
நதிமூலம் தேடி
        வாழ்வைத் தொலைக்காதீர்

சொல்லுவது என்கடமை
        சொல்லி விட்டேன்
மெல்லுவது உம்பணி
        மெல்ல மெல்லுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா

தன்னைத் தந்து என்னைக்
காத்திடும் உயிர்
தனக்கென எதையும்
சேர்க்காத
ஒருவிதமான உயிர்
எனக்காகத் திட்டுகள் வாங்கிச்
சிரித்தபடி
என்னைக் கொஞ்சுபவர்
மூட்டையாய்த் தோளில் சுமந்து
ஆடிஆடி
என்னை மகிழ்விக்கும் உயிர்.
எல்லாருக்கும் அப்பா உண்டு
ஆனால்
எனக்கவர் நண்பர்
அம்மா பன்னிரு மாதம்
என்னைச் சுமந்தவள்
ஆனால்
அப்பாவோ தன் வாழ்வு
முற்றிலும்
என்னைச் சுமந்தவர்
வேலியில் கறையானைத் தட்டித்
தன் கோபத்தைத்
தனக்குள் அடக்கி
என்னைச் சிரிக்க வைத்தவர்.
போனாலும் கூடப் போகாதவராய்
என்னுள் வாழும்
பேராசான் என் அப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டும்

தூங்கிடும் மனிதர்
எழுந்திட வேண்டும்
பஞ்சம் பஞ்சாய்ப்
பறந்திட வேண்டும்
இறைவனை மனதில்
இருத்த வேண்டும்
கறையற்ற வாழ்வு
வாழ வேண்டும்
சாதிகள் இல்லாத
சமயங்கள் வேண்டும்
நீதிகள் நிறைந்த
உலகம் வேண்டும்
பொய்கள் இல்லாத
பூமி வேண்டும்
மெய்யை மறுக்காத
மானிடர் வேண்டும்
நிந்தனை செய்வாரைத்
திருத்த வேண்டும்
திருந்த மறுப்பவரைத்
தண்டிக்க வேண்டும்
பெண்ணினைப் பெண்ணாய்
மதிக்க வேண்டும்
பெண்ணவள் தாய்மையைப்
பேணிட வேண்டும்
கல்வியில் நாளும்
மாற்றங்கள் வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி தொழிலினில்
மிளிர வேண்டும்
ஏழைகள் உலகில்
இல்லாமை வேண்டும்
நாளைய உலகினில்
சமத்துவம் வேண்டும்
பண்பாளர் பாரில்
தோன்றிட வேண்டும்
எண்ணங்கள் வாழ்வினில்
உயர்ந்திட வேண்டும்
எதிலும் எங்கும்
புதுமை வேண்டும்
புதுமையில் இனிமை
தோன்றிட வேண்டும்
சாதிகள் இல்லை
என்றிட வேண்டும்
மோதிய மனிதர்
இணைந்திட வேண்டும்
வேதியர் கோயிலில்
மாறிட வேண்டும்
வேதப் பொருளைச்
சொல்லிட வேண்டும்
இனங்களுக் கிடையே
சமத்துவம் வேண்டும்
நீபெரிது நான்பெரிது
இல்லாமை வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேண்டாம்

பூசைகளைக இணையத்தில்
காட்ட வேண்டாம்
கருவறைக்குள் வெளிச்சங்கள்
ஏற்ற வேண்டாம்
இணையத்தில் அர்ச்சனைகள்
செய்ய வேண்டாம்
வீடியோவில் பூசைகளைக்
காட்ட வேண்டாம்
வீட்டினிலே கும்பிடாமல்
இருக்க வேண்டாம்
நோட்டுகளால் அர்ச்சனைகள்
செய்ய வேண்டாம்
அர்ச்சனைகள் செய்வதாய்
நடிக்க வேண்டாம்
பேர்எடுக்கப் பெரிதாகப்
புழுக வேண்டாம்
சேர்ந்திருந்து நண்பனைக்
கெடுக்க வேண்டாம்
பால்குடித்து நஞ்சினைக்
கக்க வேண்டாம்
வாயிலும் மனதிலும்
பொய்மை வேண்டாம்
காயமே பொய்யென்று
கருத வேண்டாம்
நல்லாரை நாள்தோறும்
வைய வேண்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லாலே யாரையும்
சுட வேண்டாம்
சிரிப்பதற்கு நாள்தோறும்
மறக்க வேண்டாம்
மரிப்பதற்கு என்றைக்கும்
தயங்க வேண்டாம்
உள்ளிருக்கும் கடவுளை
மறக்க வேண்டாம்
நள்ளிரவில் தூக்கத்தை
மறக்க வேண்டாம்
குறைந்தோரை மனதார
வைய வேண்டாம்
மறைநூல்கள் படிப்பதற்கு
மறக்க வேண்டாம்
சிறிதேனும் உதவினால்
மறக்க வேண்டாம்
சிறிதான செய்கைகளைச்
செய்ய வேண்டாம்
சீரழிவுப் பாதைகளைத்
தேர வேண்டாம்
சீரழிந்த வாழ்க்கையினை
ஏற்க வேண்டாம்
வறியவரை வாழ்நாளில்
வருத்த வேண்டாம்
வறிதுவறிது எனச்
சொல்ல வேண்டாம்
முயலாமல் ஒருநாளும்
இருக்க வேண்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிலாமல் எதனையும்
செய்ய வேண்டாம்
பயின்றதனை வாழ்நாளில்
மறக்க வேண்டாம்
எழுதாமல் ஒருநாளும்
இருக்க வேண்டாம்
எழுத்துப்போல் வாழ்வதற்கு
மறக்க வேண்டாம்
அளவுக் கதிகமாய்
உண்ண வேண்டாம்
உண்டதனைக் கொழுப்பாகச்
சேர்க்க வேண்டாம்
புரிதலுடன் வாழ்தலினை
மறக்க வேண்டாம்
புரிந்தபின் வாழ்வுதனைக்
குழப்ப வேண்டாம்
உறவுகளை ஒருநாளும்
நம்ப வேண்டாம்
உறவுகளால் அழிந்துபின்
புலம்ப வேண்டாம்
லஞ்சம் ஒருநாளும்
கொடுக்க வேண்டாம்
நெஞ்சதனை ஒருநாளும்
ஏய்க்க வேண்டாம்
வஞ்சகரோ டுறவாடி
அழிய வேண்டாம்
நெஞ்சார ஏமாந்து
நொருங்க வேண்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் வந்தோம்?

நாங்கள் ஏன் வந்தோம்?
எங்களை அவர்கள் அடிக்கவில்லை.
சிறையில் போட்டு வருத்தவில்லை.
பயந்தோம்!
பிடிப்பார்கள் அடிப்பார்கள்
சித்திரவதை செய்வார்கள்
என்று பயந்தோம்.
நீங்கள் அவர்களைக் கொன்றபோது
நீங்கள் பயப்படவில்லை
நாங்கள் பயந்தோம்.
அவர்கள் உங்களைத் தேடி
எங்களைக் கலைத்தபோது
நீங்கள் மறைந்து
உங்களை மட்டுமே காத்தீர்கள்!
அப்போது நீங்கள்
ஏன் அவர்களை
அழித்தீர்கள் என்று
எங்களுக்குத் தெரியாது.
ஏன் உங்களுக்குமே தெரியாது!
ஏன் என்று கேட்ட
செல்வியைக் கொன்றீர்கள்.
திரணகமவைக் கொன்றீர்கள்.
கரவெட்டியில்
மகாலிங்கம் மாஸ்டரைக் கொன்றீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்காமலே நாங்கள் பயந்தோம்.
ஓடினோம்.
சைக்கிளில் ஏறினோம்.
பஸ்ஸில் ஏறினோம்.
கடைசியில் விமானத்தில் ஏறிப்
பயத்தைத் துறந்தோம்.
வந்தபின் பணம் கேட்டீர்கள்!
கொடுத்தோம்.
தியாகம் செய்வதாய் கூறினீர்கள்
ஏற்றுக் கொண்டோம்.
திருப்பி ஏன் எனக் கேட்கவில்லை!
எங்கள் பாதுகாப்பு உறுதியானதால்.
நீங்கள் சுட்டால் தான்
எங்களுக்குப் பாதுகாப்பு.
அதனால்,
அள்ளி அள்ளிக் கொடுத்தோம்.
நீங்கள் சுட்டுக் கொண்டே இருந்தீர்கள்.
உங்களுக்குள் நீங்கள் யுத்தம் புரிந்தீர்கள்.
நாம் கேட்கவில்லை.
துரோகிகளைச் சுடுகிறோம் என்றீர்கள்.
மீண்டும் அள்ளி அள்ளிக் கொடுத்தோம்.
புதிது புதிதாய் ஆயுதங்கள் வாங்கி
உங்களை நீங்களே சுட்டீர்கள்.
நாங்கள் எதுவும் சொல்லவில்லை.
நீங்கள் சுட்டால்தானே
எங்களுக்கு வாழ்வு.
நீங்கள் யாரைச் சுட்டால்
எங்களுக்கென்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படித்தான் இருந்தோம்.
திடீரென்று ஒரு நாள்
நீங்கள் எல்லாவற்றையும் இழந்தீர்கள்.
ஒரு மூலையில் ஒதுங்கிக் கொண்டீர்கள்.
எங்களைப் போல் விமானம்
ஏறாதவர்கள்
அத்தனைபேரும் மடிந்தார்கள்.
நீங்கள் உங்கள் துவக்குகளை
நாங்கள் உங்களுக்கு வாங்கித்
தந்தவைகளை,
எங்களைக் கேளாமலே
மௌனித்தீர்கள்.
தொடங்கும் போதும்
எங்களைக் கேட்கவில்லை
மௌனிக்கும் போதும்
எங்களைக் கேட்கவில்லை.
நாங்கள் இப்போ என்ன செய்வது?
எங்கள் இருப்பைக் காப்பாற்ற
யாராவது வரவேண்டும்
நாங்கள் பணமனுப்பத்
தயாராக உள்ளோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிச்சம்

ஒரு
பொறியியலாளன்
சிந்தித்த போது
வந்து விழுந்தது இயந்திரம்.
யார் சிந்தித்ததால்
வந்து விழுந்தது
மனித இயந்திரம்
ஆயிரக் கணக்கான நரம்புகள்..
சிறிய சிறிய பகுதிகள்...
பல மைல் தூரம் பிரயாணம்
புரியும் இரத்தம்.....
எப்பொழுதும் நிற்காது
ஓடிக் கொண்டே யிருக்கும்
இதயம்.......
புரியவேயில்லை!
இவற்றையெல்லாம் ஒன்றிணைத்து
ஒரு அசையும் உயிரினம்.
எப்படி?
ஏதோ ஒன்று
அதற்குள் இருந்து
அநாயசமாக வெளியில் போக
அத்தனையும் செயலற்று
பூச்சியமாவது எப்படி?
போனதுதான் என்ன?
போனது எங்கே போகிறது?
திரும்ப வருமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுவுமே புரியாமல்
மனம் குழம்புகிறது.
அதென்ன மனம்?
மனம் என்பது நீயா?
அல்லது..
உனக்குள் இருந்து ..
வெளியே போன அதுவா?
கேட்க வேண்டும்
புரிய வைக்க யாருமில்லையே!
புரிவதற்கான முயற்சியில்
தோற்றுவிட மாட்டேன்.
ஒரு வெளிச்சம்
இருளைக் கிழித்தபடி
கண்ணைக் கூச வைத்தபடி...
யாரோ அவ் வெளிச்சத்தில்
நிறுத்தாது
தாண்டவம் ஆடுவது தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈசனே உனக்கேன் கோயில்?

என்ன இந்த உலகம்?
எதுக்கு இந்தப் பாதகங்கள்?
அன்னை யவள் அருகிருக்கச்
சின்னஞ் சிறு பாலகரை
அன்ன மள்ளி ஊட்டுகின்ற
கையாலே அறுத் தெறிந்து
பென்னம் பெரும் பாவம்
பேயர்கள் புரிவ தென்ன?
முன்னம் ஒரு காலம்
முழுஉலகை ஆண்டு வந்த
பின்ன மிலான் பக்தர்கள்
பிஞ்சுப் பாலகரின் உயிரெடுக்க
நஞ்சு வைத்துக் கொல்கின்றார்
ஏன் என்று இன்னும்
கொஞ்சமும் புரிய வில்லை
இழிந்தவரின் பழிச் செயல்கள்
பதின் மூன்று வயதடைந்த
பச்சிளம் சிறுமி தன்னை
மதி கெட்ட மானிடர்கள்
மயங்கும் வரை யடித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதி யற்றுக் கதறியும்
கேளாத கேணையர் கூட்டம்
நீதிக்கு எதிராக நிலைமறந்து
நெருப்பி லிட்டனர் ஐயகோ
ஆண்டவா நீயிருந் திவ்வுலகில்
ஆவதுதான் என்ன கூறாய்?
நீண்ட நெடுங் கோபுரமும்
நீசர்கள் வழிபட மண்டபமும்
தத்துவம் இழந்த மந்திரங்களும்
ஈசனே உனக்கேன் இனி!
இத்துப் போனவுன் தத்துவத்தை
எறிந்து விட்டு மடிந்துவிடு!
யார்க்கு நீ அருள்தந்தாய்
யாரைநீ காத்தாய் இங்கு
பேருக்குக் கடவுள் என்று
கருவறையுள் நீ இருந்து
கண்மூடி வாழ்தலிலும் நாளையே
கதறிக் கதறி இறந்துவிடு
பேதை மனிதர்கள் சிறப்பாகச்
செத்தவீடு வைத்து மகிழட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏனய்யா?

செந் தமிழின் துணையோடு
சந்தம் நிறை கவிபண்ண
வந்து துணை புரியீசா
சித்த மதில் மனம் குழம்பி
இத்தரையில் நான் விழுந்து
நித்தமும் நானழுவ தேனய்யா?
இன்று வரும் நாளை வரும்
என்று மனங் கலங்கி
நின்று மன மழுவதேனய்யா?
இந்த மதம் அந்த மதம்
என்று பல வினா வெழுந்து
சிந்தனைகள் சிதறுவது ஏனய்யா?
நந்தவன மீதி லொரு
பூ மலர்ந்து சிரிக்காமல்
வாட்டமுற்றுத் தூங்குவது ஏனய்யா?
மானிடரின் மனங்க ளெல்லாம்
தர்ம மது செழிக்காமல்
கூனிக் குறுகுவது ஏனய்யா?
மாற்றானின் மனை புகுந்து
சேற்றை யள்ளி வீசியந்த
மானிடனை வதைப்பதும் ஏனய்யா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் தோற்றுப்போனான்

எல்லாம் செய்வேன் என்றிருந்தவன்
முடியாமல் சோர்ந்து போய் இருக்கிறான்.
பறவையைக் கண்டு
விமானம் படைத்தவன்-
மீனைப் பார்த்துக்
கப்பலைக் கண்டவன்-
இப்போ-
இந்தச் சிறிய கிருமியைக் கண்டு
வெலவெலத்துப் போயிருக்கிறான்.
ஒரு செக்கனில் மில்லியன்
கொலை செய்யும்
அணுகுண்டு இவனின்
அற்புதக் கண்டுபிடிப்பு.
அதனால் கூட
இதனைக் கொல்ல முடியாது
ஏங்கிப் போய்ப் புலம்புகிறான்.
மனிதன் தோற்றுவிட்டானா!
ஆமாம் இப்போ தோற்றாலும்
மீண்டும் எழுவான் எழுவான்
புதிய தோற்றத்துடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தனின் வேண்டுகோள்

நான் இறந்து போய் விட்டால்
நண்பர்களே ஏன் இறந்தான்
என்று சொல்லி ஆராயாதீர்
வானிருந்து வந்தா னென்று
தேன் சொட்டப் புகழாதீர்
தேனைவிடச் சுவையாகக்
கவியெழுதி மாண்டானென்று பல
கதை சொல்லி மகிழாதீர்

நா னிருக்கும் போதினிலே
ஏறெடுத்தும் பார்க்காத நீவிர்
நான் மடிந்து போனபின்
மாற்றுக் குறையாத முத்தாயும்
மனிதருள் மங்காத தங்கமென்றும்
போனபின் புலம்பி எனைப்
புனிதனெனப் புழுகி வைத்து
புண்ணியம் தேட முயலாதீர்

கண்ணனென எனை விழிக்காதீர்
கடவுளுடன் எனைச் சேர்த்து
வண்ண மலர் தூவியெனைப்
பரிகசிக்காதீர் : இவ்வுலக
மண்ணிலெனைப் போற்றுவதாய்க் கூறி
என்னைத் தூற்றாதீர் அகன்றிடுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடந்தவை...

நாடகம் ஒன்று தவண்டு
நடந்து எழுந்து
ஓடத் தொடங்கி விட்டது.
தடி எடுத்தவர் எல்லாம்
சண்டப் பிரசண்டர்
ஆகி விட்டனர்.
நேற்றுக் குரைத்த நாய்கள்
சேற்றுக்குள் முழுகி எழுந்து
குதிரைகளாகி
ஓடிக் கொண்டிருக்கின்றன.
கத்த மறுத்து நின்ற காகம்
குயில்போல் கூவியபடி
பறக்கத்
தொடங்கி விட்டது.
சுமத்திரையின் மைந்தன்
தடைகள ஓட்டப்போட்டியில்
தடியைக் கொடுக்காமல்
ஓடிக் கொண்டிருக்கிறான்.
கர்த்தரின் முன்னால்
கர்த்தராகிச் சிவனின்
தொழில் புரிந்தவன்
வெள்ளைக் கரை வேட்டியுடன்
கொள்ளை அழகுடன்
ஊர்வலம் வருகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளியை மணந்து வழிநடுவில்
கிள்ளி விட்டவன்
கர்ப்பக்கிரகத்துள் சாமியைக்
கும்பிடக் கையில்லாமல்
விக்கிவிக்கி அழுது வடிகிறான்.
எழும்ப முடியாமல் மாங்கனி பெற்றிட
உலகைச் சுற்றி வருவதற்கு
கதிரையைச் சுற்றி
வலம் வருகிறார்.
தாடி வளர்த்துத் தாசியைப்
புணர்ந்தவனின்
வாடிக்கையாளன் விக்கித் தவித்துத்
தாடியைத் தடவியபடி
மாடிக்குப் போகிறான்.
பார்த்துப் பார்த்துச் சலித்துப்போன
நாடகத்தை ஓரந் தள்ளி
வெறுத்து வேதனையில்
நீர்த்துப்போய் நிலையறியாது
சோர்ந்துபோய் இருக்கிறான்
சொந்தக்காரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்கள் நலிந்து போனோம்

அப்போதெல்லாம்
எங்கள் பகுதியில்
சிங்களவன்
குடியிருக்க வந்ததில்லை.
நீங்கள் அவனைத்
தட்டி எழுப்பி வரவழைத்து
விட்டீர்கள்.
ஆயுதம் எடுத்த நீங்கள்
ஆயுதத்தை மௌனித்தபோது
வழிநடத்த வேறொருவரை
விட்டுச் செல்லவில்லை.
காணிகளை அவன் கையகப்படுத்தினான்.
தர மறுக்கிறான்.
இப்போ காணியுமில்லை
வீடுகளுமில்லை.
படுத்துக் கிடந்தவனைத்
தட்டி எழுப்பிவிட்டு
நீங்கள்
நிரந்தரமாகத் தூங்கப்
போய் விட்டீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் இன்னும் தூங்காமல்
காத்திருக்கிறோம்.
வீடுகளில் வந்து
எங்கள் பிள்ளைகளை
அழைத்துச் சென்றவர்களை
இப்போ காணவில்லை.
பிள்ளைகளையும் காணவில்லை!
இருந்தவை யெல்லாம்
இழந்து விட்டோம்.
உயிரை மட்டும் காப்பாற்றி
உறவுகளைத் தேடிக்
கொண்டிருக்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேடிக்கை மனிதர்

எத்தனை மனிதர்கள் எம்நாட்டில்
ஏய்த்திடும் வேலை செய்திங்கு
சொத்துகள் கூட்டும் விருப்பினிலே
சொந்தம் அழித்து மகிழுகிறார்
மத்தது கடையும் தயிர்போலே
மக்களைக் கடைந்து பூவுலகில்
பித்தம் பிடித்து வீதிகளில்
பேயராய் அலைந்து திரிகிறார்

தேர்தலில் வென்றிட வேண்டி
ஊர்களில் உளறிக் கொட்டுகிறார்
வேர்களைப் பிடுங்கி எறிந்துவிட்டு
வேறு பயிர்களை நடுகின்றார்
தேர்தலில் பணத்தை மக்களுக்கு
தெரிந்தே கொடுத்து மகிழுகிறார்
பேரினைப் பெரிதாய்ப் பெற்றிடவே
பேயராய் மக்களை மாற்றுகிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தக் கண்களை அழைத்தபடி
கற்பினைப் பேரம் பேசுகிறார்
செந்தமிழ் வழியே வந்துதித்த
ஒழுக்கம் நிறைந்த தமிழரவர்
சிந்தனை செய்ய மறுக்கின்றார்
சிறு பிள்ளையாக நடக்கின்றார்
நிந்தனை புரிந்து ஆயினிமிங்கு
தேர்தலில் வெல்ல முயலுகிறார்

வேதனை கொடுத்து மகிழுகின்ற
வேடிக்கை மனிதரை இவ்வுலகில்
சோதனை கொடுத்து மாய்ப்பதற்கு
சோரம் போகா மானிடரே
பாதம் நிலத்தில் படமுன்னே
பரலோகம் அனுப்ப எழுந்திங்கு
வேகம் கொண்டு விரைவாக
விரைந்து விரைந்து எழுந்திடுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணித்து விடு

மரணம் வருமளவுக்கும்
காத்திருக்காதே போய்விடு.
இருந்தென்ன செய்வாய்?
இரைப்பையை நிரப்புவதுதான் மிச்சம்!
குரங்குபோலத் தாவித்தாவி
கட்சிகளை அரவணைப்பாய்!
கதிரை கிடைத்ததும்
குதிரைபோல் ஓடத் தொடங்குவாய்!
பார்த்தாயா பதிவொன்றை
போரில் உயிர் துறந்தவளின்
அம்மா
அலைந்து திரிகிறாளாம்.
குடிக்கத் தண்ணியின்றிக்
காத தூரம் செல்கிறாளாம்.
நீ ஓட்டுக் கேட்கச் செல்கிறாய்!
உனக்கு வெட்க மாயில்லை!
நீயெல்லாம் வென்று
தேசியம் வாழவா போகிறது!
மரணத்துக்காகக் காத்திராதே
இப்பவே
மரணித்து விடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னர்கள் நீங்களே மடையர்களல்ல!

நாளைக்குத் தேர்தலாம்!
கள்ளர் குகைக்குக்
களவாணிகளை அனுப்பும்
தேர்தலெனச் செப்புகிறார்!
பணநாயகத்தார்
பவனிவரும்
ஜனநாயகத் தேர்தலாம்.
போதை மருந்திற்குப்
பாதை வகுத்தவனும்
சீதையைச் சிலம்பலாக்கிய
கற்புக்கரசனும்
விடுதலையை விலைபேசி
விற்றேப்பம் விட்டவனும்
ஏழைகளைப் பார்த்து
ஏளனம் செய்தவனும்
நாளைக்குத் தேர்தலில்
நாடகம் அரங்கேற்ற
அரச உடையணிந்து
அரிதாரம் பூசி
விரசமாகச் சிரித்தபடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரில் பவனி வருகிறான்.
மக்களே விழியுங்கள்
திக்குத் திசை தெரியாமல்
முக்கித் தக்கி முனைப்போடு
நாளைக்கு விடியுமென்று
கனவுடனே செல்லாதீர்.
கேளுங்கள் மக்களே
நீங்கள் ஒன்றும் சாமானியரல்ல
மன்னர்கள் நீங்களே!
மடையர்களல்ல!
கிழித்துப் போடுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யதார்த்தம் சிரிக்கிறது

தீபம் ஏந்தியபடி
ஊர்வலம் நகர்கிறது.
அஞ்சலி செய்வதாக
அவர்களின் வாய்கள் சத்தமாகக்
கோசம் எழுப்புகின்றன.
வழியில்,
கால் இழந்த மாவீரன்
முனகியபடி அவர்களைப் பார்க்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன கண்டீர் மானிடரே?

கத்தி யின்றிரத்த மின்றி
யுத்த மொன்று நடக்குது
புத்தியுள்ள மனிதர் கூட்டம்
புத்தி மழுங்கி அழுகுது

கடவுள் வாழும் இல்லங்கள்
கதவு சாத்திக் கிடக்குது
கடவுள் வரும் வேளைக்காக
மனித குலம் இறைஞ்சுது

கொத்துக் கொத்தாய் மனிதரோ
கொரோனாவினால் சாகிறார்
இத் தருணம் பார்த்துப்பலர்
லாபம் தேடி அலைகிறார்

சத்தியமாய் அவரைத் தேடிக்
கத்தி கொண்டு அலைகிறேன்
சுத்திச் சுத்திப் பார்க்கிறேன்
சும்மா விடேன் அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறுகுழந்தை கூடச்
சிரசிடியால் துடிக்குது
பெண்ணம் பெரிய மனிதர்களோ
பெரும் லாபம் தேடுகிறார்

என்ன கண்டீர் மானிடரே?
எதற்கு இந்த(ப்) பொல்லாப்பு
நன்மை கருதிச் சொல்கிறேன்
வாலைச் சுருட்டிக் கொள்ளுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களின் கடவுள்கள்

வேர்த்து விறு விறுத்து
        வேதனைகள் ஏது மின்றிச்
சேர்ந்து குர லெழுப்பும்
        கொரோனாவின் மென்னி பிடித்து
இரவும் பகலும் அயராது
        இம்மியும் தூங்காது எங்களை
உள்ளே இருத்தித் தங்களைப்
        பலியிடும் தாதிகளே வணக்கம்.

கடவுளைக் கண்டோ மில்லைக்
        கடவுளாய் நீங்கள் வந்து
இடரினைத் தீர்க்கும் பாங்கில்
        உடலெலாம் சிலிர்த்து உள்ளம்
உண்மையாய் உங்கள் பாதம்
        பணிந்து பலமணி நேரமாய்
வைத்திய மணிகளோடு தாதிகள்
        உங்களையும் வணங்கி நிற்கிறோம் .

( கோவிட் - 19 கால்தில் அரும்பணி புரிந்த தாதியர்களையும் வைத்தியர்களையும் வாழ்த்திப் பாடப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிமிர்ந்து நிற்போம்

எத்தனை வைரஸ்
எங்களைத் தாக்கினும்
சித்தம் கலங்காது
நிமிர்ந்து நிற்போம்
வருவது வரட்டும்
வந்தது போகட்டும்
தெருவினில் செல்லாது
வீட்டில் இருப்போம்
எலும்புகள் சப்பாது
இரவினில் ஒருதரம்
எலுமிச்சைச் சாறினுள்
மஞ்சள் கலந்து
மளமள வென்று
குடித்து வரின்
அளவு நிறைந்த
எதிர்ப் புணர்வு
உடலில் நிறைந்து
உண்மையில் உங்கள்
உயிர் பறிக்க
வைரசாலும் முடியாதாம்.
உங்களுக் குள்ளே
உறைந்து கிடக்கும்
உண்மையான விழிப்புணர்வே
வைரஸ்கொல்லும் மருந்தாகும்
எழுவோம் எழுவோம்
அழுவதை விடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா

சின்னஞ் சிறிய கிருமியிது
சிறுகச் சிறுகக் கொன்றுவிடும்
தன்னலம் கொண்ட இக்கிருமி
கொரொனாதானே அதன் பெயராம்

வெள்ளை கறுப்புப் பாராமல்
வெடுக்கெனப் பாய்ந்து பிடித்துவிடும்
பொல்லாக் குணத்தைக் கொண்டதுவாம்.
எங்கள் நவீனக் கிருமியிது.

சீனர் வாழும் திருநாட்டில்.
கடுகி விரைந்து உருவாகி(ப்)
பட்டையைக் கிளப்புது கொரோனா.
பயந்து மனிதர் ஓடுகிறார்.

காய்ச்சல் வருமாம் அதனோடு
தடிமன் இருமல் இவையோடு
காய்ச்சே எடுக்கக் கிலிவருமாம்
பயந்து மனிதர் ஒடுங்குகிறார்

தும்மல் கொண்ட ஒருமனிதன்
தும்மும்போது துமி பட்டால்
தாம்தூம் என்றே புதுக்கிருமி
சட்டெனப் பிடித்து வதைத்துவிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையைக் கழுவி அனுதினமும்
குளித்து முகத்தைத் தேய்த்துவிட்டு
மெய்யைச் சூடாய் வைச்சிருந்தால்
கொரோனா பயந்து ஓடிடுமே

பச்சைத் தண்ணியைக் குடிக்காது
சுட்டதை மூன்று வேளைக்கும்
இச்சையுடனே குடித்து விட்டால்
கொரோனா பயந்து ஓடிடுமே

இஞ்சி பூண்டு சேர்த்துணவில்
பச்சை மிளகாய் மஞ்சளுடன்
பஞ்சிப் படாமல் உண்டுவிடின்∴
கொரோனாக் கிருமி ஓடிடுமாம்

வேலையைக் குறைத்து வீட்டினிலே
ஆற அமரக் கதிரையிலே
காலைக் கையை நீட்டிவளர்த்து
ஓய்வெடுத்தாலும் நன்மை வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடக்கம்

அடங்கிப் போனோம்
அடங்கிப் போனோம்
முடக்கத்தில் எம்மைத்
தொலைத்து விட்டோம்

வீதியில் கண்டால்
கதைக்க மாட்டோம்
பீதியில் எம்மைத்
தொலைத்து விட்டோம்

தூரத்தூர இடைவெளிவிட்டுத்
துயரம்மிகுந்த மனதுடனே
பேரக்குழந்தைகள் வந்தாலும்
ஒதுங்கியொதுங்கிச் செல்வோம்

பார்ட்டிகளேதும் வீட்டினிலே
பெரிதாய்வைத்துச் சீரழியோம்
நேர்மைகளற்று மற்றோரை
நெருக்கியடித்திட மாட்டோம்

கடவுளர் இனிமேலிங்கு
தேரினில்வருவது நின்றுவிடும்
படபடவென்று தேங்காய்கள்
வீதியிலடித்து உடைக்கமாட்டோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்குமெனக்கும் இடையினிலே
இரண்டு மீற்றர்தூரம்தான்
மினக்கெட்டுவீதியில் இனிமேல்
மிலாந்தித்திரிய மாட்டோம்

மாபெரும்செலவில் கல்யாணம்
மறந்தும்வைத்திட மாட்டோம்
மஞ்சள்கயிறை வீட்டிற்கட்டி
கல்யாணம்செய்து மகிழ்ந்திடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக மாறுதல் நடக்கிறது

வேள்வி நடக்குது வேள்வி நடக்குது
யாருக்கும் இங்கே புரியவில்லை
துள்ளித் துள்ளி நடந்தவர் எல்லாம்
தொப்பென்று விழுந்து மடிகிறார்

காசு பணத்தில் மிதந்தவர் எல்லாம்
காலனின் மடியில் கிடக்கின்றார்
ஆசு கவிகள் பலர் இங்கு
கவிதைகள் படைத்துச் சிரிக்கிறார்

எங்கே முடியும் எப்போ முடியும்
எவருக்கும் எதுவும் தெரியவில்லை
தூங்கும் உலகின் துயரம் கண்டு
தூதன் யாரும் வரவில்லை

எட்ட நடந்து போகச் சொன்னால்
எகிறி மனிதர் குழம்புகிறார்
திட்டமிட்ட செயல் ஒன்று பெரும்
லாபம் பெறவே நடக்கிறது.

உலகு மாறப் போகிற திங்கு
உருவம் குறுகப் போகிறது
விலகும் மனித உரிமை யாகும்
விற்பனையாகப் போய் விடுமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்கோள் ஒன்று அருகில் நின்று
காகிதக் கப்பல் செய்கிறது
பூமி சுற்றுதல் நின்று இங்கு
புதிய கிரகம் தயாராகும்

அருவமான கடவுளர் யாவரு மிங்கு
உருவம் கொண்டு வருவாரோ?
பெரு விருட்சங்கள் சாயச் சின்னக்
கிளைகள் மரமாய்த் தோற்றுமோ?

ஊரும் உயிரினம் யாவு மிங்கு
பேசும் மனிதராய் மாறுமோ?
வருத்தம் மனதை உறுத்திட விங்கு
உலகமாறுதல் தானாய் நடக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உனது முடிவு உன்னிடமே

விலகி இரு வீட்டில் இரு
உலகைப் பார்த்து மாறுநீ
கலகம் செய்வதை விட்டு விடு
கருணையோடு வாழப் பார்
நாளை நடப்பது யார்க்குத் தெரியும்
நம்பி வாழ மாறுநீ
காளை போல நகர்ந்து பாரு
காரியங்கள் நடக்கும் பாரு
கிருமி வருது ஒதுங்கி நில்
கில்லாடியாக ஓடிச் செல்லு
மருந்து மாயம் எதுவும் இல்லை
மனதை மிஞ்சி எதுவுமில்லை
வந்த பாதை தெரிய வில்லை
போகும் வழியும் புரியவில்லை
இந்த உலகில் நடப்ப தெல்லாம்
நமது கையில் என்றுமில்லை
உனது கையில் எல்லாம் என்றால்
உனது முடிவும் உன்னிடமே
மனது சொல்ல நகர்ந்து செல்
மறந்தும் கூடத் திரும்பிடாதே
நடக்கும் போது முன்னே பார்
முள்ளிருப்பின் விலக்கிச் செல்
பட படக்கும் நெஞ்சை யடக்கு
பயம்விலகப் பாட்டுப் பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வக்கற்ற கொடியவர்கள்

சின்னஞ் சிறுபூச்சி
சித்திரவதை செய்யப்
பென்னம் பெரியவர்கள்
முழிபிதுங்கி நிற்கிறார்
ஆயிரம் ஆயுதங்கள்
அழிவுமிகு எறிகணைகள்
அத்தனையும் படைத்தென்ன
பூச்சிக்கு முடிவுண்டா?
உலகுக்கு அரசனென
முடிசூட்டிக் கொண்டவர்கள்
வெலவெலத்து நடுங்கிடும்
வேதனைக்கு முடிவுண்டா?
எத்தனை உயிர்களை
எள்ளளவும் எண்ணாது
சத்தமின்றிக் கொன்றவர்கள்
சித்தம்கலங்குவது ஏனோ?
உயிரின் பெறுமதியை
உலகுக் குணர்த்தவென
மயிரிலும் சிறிதான
சிறுபூச்சி வந்ததுவோ?
சந்திரனைத் தேடி
ஆய்வுக்குச் சென்றவர்கள்
சந்தணத்தைப் பொட்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்றியி லிட்டவர்கள்
அரசியலை அழிவுக்காய்
ஆக்கிய அரக்கர்கள்
கரங்களைத் துண்டித்துச்
சாப்பிட வைத்தவர்கள்
விருந்துக்கு மனிதர்களை
உணவாய் படைத்தவர்கள்
பருந்துக்கு உணவாகப்
பாவிகளைப் படைத்தவர்கள்
ஈராக்கை நொடிப்பொழுதில்
துவம்சம் செய்தவர்கள்
காரண மின்றியே
மானிடரைக் கொன்றவர்கள்
கேவலம் சிறுபூச்சி
ஊர்வதனைத் தடுப்பதற்கு
வகையின்றித் தவிக்கின்றார்
வக்கற்ற கொடியவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை எழுதுவதற்கென ஒரு வரம்பு கட்டி, அதற்குள் நின்று சொற்கள் எடுப்பது கவிதையாகாது. அப்படி நின்று எடுப்பவர்களும் கவிஞர்கள் ஆவதில்லை. கவிஞனின் உணர்வு மடையுடைத்த நீர்போல வெளிவர வேண்டும். கட்டறுத்துப் பாய வேண்டும். படிக்கும் வாசகனின் மனதுள் ஊடுருவ வேண்டும். அப்போதுதான் அப்படைப்பு நிலைத்து நின்று பேசப்படுவனவாக அமையும். ஏதோ எழுத வேண்டும்... என்ற எண்ணப்பாங்குடன் எழுந்தமானமாக எழுதிச் செல்பவர்களுக்கு மத்தியில், தம் பார்வையை உறுத்தும் விடயங்களை உள்வாங்கி... மனதில் எழும் எண்ணங்களை விரிவாக்கி... அவற்றை எழுத்துக் கோர்வைகளாக, அவை எங்கிருந்து பெறப்பட்டதோ அந்த இடத்திற்கே திரும்பவும் ஒரு படைப்பாக கொண்டுபோய்ச் சேர்ப்பவர்கள் ஒருசிலரே. இந்த ஒருசிலருள் ஒருவர்தான் கவிஞர் கரவை மு. தயாளன் அவர்கள்..

அலெக்ஸ் பரந்தாமன்

ISBN: 978-955-4041-23-3

9 789554 041233

Wanasinghe Printers, Batticaloa. 065 2227170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org